மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முறைப்படி அது 'சக்கன் குடியிருப்பு' என்று இருந்தால் சரியாக இருக்கும்.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு விவசாய வங்கியில் களவாடப்பட்ட நகைகள்.

*6162 திரு. கே. ரமணி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி கூட்டுறவு விவசாய வங்கியில் அடகு வைக்கப்பட்டிருந்த நகைகள் திருடுபோய் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு திருப்பித் தருவது தொடர்பாக இவ்வாண்டு ஏப்ரல் மாதம் கள்ளக்குறிச்சி நகை மீட்போர் சங்கத்திடமிருந்து மனு அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) களவாடப்பட்ட நகைகள் மீட்கப்பட்டு மத்திய கூட்டுறவு வங்கியில் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ளது. வழக்கு முடிந்த பிறகு நகைகள் திருப்பிக் கொடுக்கப்படும்.

திரு. கே. ரமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட வங்கியிலிருந்து நகைகள் எல்லாம் எப்படி திருடப்பட்டன? அந்த வங்கியினுடைய பாதுகாப்பு, மற்ற ஏற்பாடுகள் அவ்வளவு பலவீனமாக இருந்ததா? அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்து, அதை மீட்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருடர்களுக்குப் பலம், பலமின்மை பற்றிக் கவலையில்லை. எப்படியோ திருட முயற்சிப்

பார்கள். அகப்பட்டதை அவர்கள் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். கள்ளக்குறிச்சி தொடக்கக் கூட்டுறவு வங்கியில் 3-11-1984 ஆம் நாளன்று 1,052 கடன்காரர்களின் 45 இலட்சம் மதிப்புள்ள 23,394 கிராம் நகைகள் களவாடப்பட்டு, பின்னர் காவல் துறையினரால் மீட்கப்பட்டு, காவல் துறை அதிகாரிகளே மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகத்திலுள்ள இருப்புப் பெட்டகத்தில் மேற்படி மீட்ட நகைகளைப் பாதுகாப்பாக வைத்துள்ளனர். மேற்படி நகைகள் களவு போனது தொடர்பாக காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட வழக்கு தற்போது கள்ளக்குறிச்சி நடுவர் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. மேற்படி வழக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி நகைகள், காவல் துறையினரின் பொறுப்பில் தென்னாற்காடு மத்திய கூட்டுறவு வங்கியின் பாதுகாப்பில் உள்ளதால் இது சம்பந்தமாக வழக்கு முடிந்த பின்னரே நீதிமன்றத் தீர்ப்புக் கேற்ப காவல் துறையினரின் அனுமதி பெற்று நகைகளை சம்பந்தப் பட்டவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க இயலும்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல விவரங்களைத் தந்தார். நான் குறிப்பாக இதைக் கேட்டதற்குக் காரணம் என்னவென்றால், வங்கிகளிலே மட்டுமல்ல, இப்போது பெரிய நகரங்களிலும், கிராமங்களிலும் நகைகள், சொத்துக்கள் கையிலே வைத்து இருக்கக்கூடியவர்களுக்கு திருடர்களால் ஏற்பட்டு வரும்படியான பயங்கரமான நிலைமை பற்றி அமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசாங்கத்திற்கும் தெரியும். வங்கியிலேயாவது கொண்டு போய் அந்த நகைகளை அடமானம் வைத்தோ, மற்ற விதத்திலோ அதற்குப் பாதுகாப்புத் தேட முடியுமா என்று அங்கே கொண்டு செல்கிறார்கள். அங்கேயும் இந்த நிலைமை ஏற்படுவதை கறாராகத் தடுப்பதற்கு ஒவ்வொரு வங்கிக்கும் திருடர்கள் புகுந்து கொள்ளையடிக்க முடியாத அளவிற்கு அதற்குத் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை அந்த நகைகளை வைத்திருக்கக் கூடிய பகுதிகளுக்கு உருவாக்குவதற்கு விசேஷமான ஏதாவது நடவடிக்கையை அரசு எடுக்க உத்தேசித்துள்ளதா? அந்த பாதுகாப்பு மக்களுக்குக் கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். . முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கோ அங்கொன்று, இங்கொன்று என்று சொல்லி, திருடர்கள் இத்தகைய நடவடிக்கைகளிலே ஈடுபடுகிறார்கள். இந்த நகைகள் பாதுகாப்பாகவே வைக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையின் அடிப்படையில் இன்னும் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.